Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 90

National Tamil Daily தேசிய தினசரி

(12-5-65)

விசுவாவசு சித்திரை 30 முஹர்ரம் பிறை 10 புதன்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 18-00 | 3-25 |

தரத்திலும் மணத்திலும் சிறந்தது
காமதேனு கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12 போன்: 5830

# மந்திரிகளை வரவேற்க செல்லாதது ஏன்?

## தமிழரசுக் காரியதரிசி அமிர்தலிங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

"மந்திரிகளின் வருகை பற்றி எங்களுக்கு எதுவித தகவலும் கொடுக்கப்படவில்லை. இந்நிலையில் மந்திரிகளின் வரவேற்புக்களில் நாங்கள் கலந்து கொள்ளவேண்டுமென்று எவராவது எதிர்பார்க்க முடியுமா?" என்று தமிழரசுக்கட்சிப் பொதுக்காரியதரிசி திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சிப் பொதுக் காரியதரிசி திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்துக்குத் தொழில் வீடமைப்பு மந்திரியும், தேசிய மய சேவைகள் மந்திரியும் விஜயம்செய்தது குறித்து தப்பான அறிக்கைகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதை யிட்டு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலையை தெளிவாக்கும்பொருட்டு இந்த அறிக்கை வெளியிட வேண்டியதாயிற்று.

இந்த விஜயம் குறிக்கப்பட்ட இரு மந்திரிகளுக்கும், திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு மிடையிலான தனிப்பட்ட ஒழுங்கேயாகும், பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தபின்னரே இவ்விரு மந்திரிகளின் விஜயம்பற்றி எங்களுக்குத் தெரியவந்தது. யாழ்ப்பாண எம். பி. யின் வேண்டுகோளின் பேரில் மந்திரிகள் யாழ்ப்பாணத் தொகுதிக்கு விஜயம் செய்வதாக செய்திகளில் தெரிவிக்கப்பட்டது, பார்லிமெண்ட்ரிக்குழுக் கூட்டத்தில் தொழில் மந்திரி தங்கள் விஜயம்பற்றி தற்செயலாக கூறியிருந்தார். வடமாகாணத்தில் உள்ள பதினொரு பார்லிமெண்ட் உறுப்பினர்களில் ஒன்பதுபேர் தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களாக இருந்தபோதிலும் மந்திரிகளின் விஜயம் குறித்து இவர்களில் ஒருவருக்காவது உத்தியோக பூர்வமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. மந்திரிகளின் விஜயத்தையும் அதற்கான நிகழ்ச்சி நிரல்களையும் தயாரிக்கும்பொறுப்பும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தினதும் தமிழ்க்காங்கிரஸ் கமிட்டியினதும் நிர்வாகத்திலேயே இருந்தது. மந்திரிகள் வந்திறங்கிய இடமான காங்கேசன்துறைத் தொகுதி எம். பி.க்கு அவர்கள் வந்திறங்குவது பற்றியோ அல்லது யாழ்ப்பாணத் தொகுதியில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றி யாழ்ப்பாணம் நகரமேயருக்கோ எது ... இத்தகைய சூழ்நிலையில் நாங்கள் வரவேற்பில் கலந்து கொள்ள வேண்டும் என்று யாரேனும் எதிர்பார்க்க முடியுமா? மந்திரிகளின் விஜயம் சம்பந்தமான நிகழ்ச்சிகள் குறித்து யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க அதிபர்களுக்கே எதுவும் தெரியாது. மந்திரிகள் விஜயம் செய்வதாயிருந்தால், அந்தப் பகுதியில் உள்ள எம். பி.க்களுக்கு (அவர்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாய் இருப்பினும் கூட) நிகழ்ச்சிநிரல் முன்னேற்பாடாக அனுப்பப்படுவதுதான் ஒழுங்கும் வழக்கமுமாகும்.

8-ந் திகதி நடைபெற விருந்த மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் மந்திரிகள் கலந்துகொள்வது பற்றி அரசாங்க அதிபர் எங்களுக்கு அறிவித்திருந்தார். எங்களில் அநேகர் அக்கூட்டத்துக்கு சமூகமளித்தோம்.

எங்கள் கட்சி ஆதரவாளர்கள் கல்வியங்காடு என்னுமிடத்தில் மந்திரிகளை வரவேற்க தெருவீதிகளை அலங்கரிக்கிறார்கள் என்பது தெரிந்ததும், முன்னர் நிச்சயித்திருந்த பாதையை மாற்றி மக்களை வசிக்காத செம்மணி என்ற இடத்தினூடாக மந்திரிகள் உடுப்பிட்டிக்கு அழைத்துச் செல்லும்படியான மன உணர்ச்சியுடன் விஜயத்துக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

என்ன நடந்தது என்பதை யிட்டு புகார் கூறுமுகமாக நான் இந்த அறிக்கையை வெளியிடவில்லை, எங்கே தவறு இருந்தது, யாருடைய செய்கை "தேசிய அதட்ட"மானது என்பதை மக்கள் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும்பொருட்டே இந்த அறிக்கையை வெளியிடுகிறேன்.

## வேலையில் மீண்டும் சேர்க்கவும்

### உத்தியோகமொழி சட்டத்தால் வேலையிழந்தோர் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

சிங்களம் மட்டும் சட்டம் காரணமாக வேலையிழந்தவர்களுக்கு திரும்பவும் வேலை வழங்குமாறும் அல்லாவிடில் வேலையை இழந்ததற்காக நஷ்டஈடு கொடுக்கவேண்டும் எனவும் கோரும் தீர்மானம் சிங்களம் மட்டும் சட்டத்தினால் வேலையிழந்தோர் சமூகத்தில் நிறைவேற்றப்பட்டு, பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்த தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

முந்திய அரசாங்கம் செய்த அநீதியினையை தேசிய அரசாங்கம் பரிவுடன் நோக்கி நீதியானவழியில் தீர்த்துவைக்கும் என்ற நம்பிக்கையுடன் உரிய காலம் வருமுன்னரே இன்னல்கள் காரணமாக அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற ஊழியர்களின் நிலையை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம். இந்த ஊழியர்களை மீண்டும் வேலையில் அமர்த்தி அவர்கள் முன்னர் அரசாங்க சேவையில் சேரும்பொழுது எந்த விதிகளுக்கமைய சேர்ந்தார்களோ அந்த விதிகளுக்கிணங்க வேலை செய்ய வழிவகை செய்யவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறோம், அல்லாவிடில் அவர்கள் வேலையிழந்ததற்காக நஷ்டஈடு வழங்கவேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

வடபகுதி அசைஸ் விசாரணை

## "கணவன் மருந்து கொடுத்தாக சகோதரி கூச்சலிட்டார்"

### கரையூர் கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

சம்பவம் நடந்ததினம் நடுச்சாமத்தில் என்சகோதரி கூச்சலிட்ட சத்தம் கேட்டது. "ஐயோ எனக்கு மருந்து கொடுக்கப்படுகிறது" என்று சகோதரி கூச்சலிட்டார். நான் எழுந்து ஓடிச்சென்றேன். சகோதரி வீட்டுப்படலைக்கு வெளியில் வாந்தியெடுத்தபடி நிலத்தில் விழுந்தார்.

கரையூர் கொலைவழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, காலஞ்சென்றவரின் சகோதரன் கலைமார் சாட்சியமளித்தபோது மேற்கண்டவாறு கூறினார்.

1963-ம் ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி கரையூரில் மரியான் அந்தோனிப்பிள்ளை என்பவர் அவரது மனைவி மாரியம்மாவை கொலைசெய்ததாக இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அரசாங்கத்தில் திரு. எஸ். பாலக்குமார் நியமிக்கப்பட்டிருந்தார்.

கலைமார் தொடர்ந்து சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

காலஞ்சென்றவர் எனது சகோதரி. எதிரி எனது சகோதரியின் கணவர். 1963-ம் ஆண்டு எதிரி என் சகோதரியுடனேயே வசித்துவந்தார். சம்பவம் நடந்ததினம் எனக்கு ஞாபகமிருக்கிறது; அன்றிரவு சகோதரி போட்ட சத்தத்திற்கு நான் ஓடிச்சென்றேன். அந்த நேரத்தில் எதிரி வீட்டில் யார் இருந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் சகோதரியிடம் என்ன விஷயமென்று கேட்டேன். தனக்கு கட்டாயப்படுத்தி மருந்து கொடுத்துவிட்டதாகச் சகோதரி கூறினார். யார் மருந்து கொடுத்ததென்று கேட்டபோது தனது கணவன் கொடுத்ததாகக் கூறினார். எதிரியை அந்த நேரத்தில்வீட்டிற்குள் கண்டேன். நான் எதிரியுடன் பேசவில்லை. எதிரியின் மூன்று பிள்ளைகளும் வீட்டில் இருந்தார்கள். வேறு யாரும் இருக்கவில்லை. மூத்த பிள்ளைக்கு 10 வயது. நான் காரை வாடகைக்கு பிடித்து சகோதரியை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றேன். அதன் பின் ... வரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் அனுமதித்தேன்

(6-ம் பக்கம் பார்க்க)

## "குழாய்நீர் விநியோகத்தில் அங்கத்தவர் எதிர்ப்பு"

### சிலமணிநேர சத்தியாக்கிரகம் கைவிடப் பட்டது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கொழும்புத்துறை வட்டாரத்தில் குடிதண்ணீர் விநியோகத்தை விஸ்தரிப்பதற்காக நடைபெற்ற வேலைகள் அந்த வட்டார அங்கத்தவர் திரு தம்பு கந்தையாவின் 'சத்தியாக்கிரகத்தை'த் தொடர்ந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. குழாய் நீர் விநியோக விஸ்தரிப்புத் திட்டம் சம்பந்தமாகவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் யாழ்ப்பாணமேயரை வட்டார அங்கத்தவர் பேசியதாகவும் அதை மேயர் பொருட்படுத்தாமல் தொடர்ந்துவேலைகள் நடைபெற்றதால் அங்கத்தவர் 'சத்தியாக்கிரக' முயற்சியிலிறங்கியதாகவும் அறியப்படுகிறது, உதவி மேயரும் மற்றும் மாநகரசபை உறுப்பினரும் தலையிட்டதன் பேரில் நேற்று நண்பகல் 'சத்தியாக்கிரகம்' செய்த அங்கத்தவர் அவ்விடத்திலிருந்து சென்றார்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 5-ம் வட்டாரத்தில் குடிதண்ணீர் விநியோகத்தை விஸ்தரிப்பதற்காக தற்போது குழாய் அமைக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கொழும்புத்துறை வீதிக்கு நேராகக் குழாய்கள் அமைப்பதை விடுத்து யாழ்ப்பாண மேயர் சுவாமியார் வீதிக்கு தண்ணீர் விநியோகிக்க குழாய்கள் அமைப்பதாகவும் அதை ஆட்சேபிக்கும் முகமாகவும் நேற்றுக்காலை யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. தம்பு கந்தையா சுவாமியார் வீதியில் குழாய்கள் தாழ்க்கும் வேலைக்காரர்களை வேலை செய்ய விடாது தடுக்கும்வகையில் சத்தியாக்கிரகம் செய்தார். ஆனால் குழாய்கள் தாழ்ப்பதற்காக நேராகச் சுவாமியார் வீதிவழியாக வேலைசெய்த

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிவாக்கு

முன்னேற்றம் என்பது ஒரே அடியாக வந்து விடாது. பிழைகள் செய்து அறிவடைந்து பிழைகளைத் திருத்திக் கொண்டேதான் முன்னேற்றமடைய முடியும். பலதோல்விகளுக்குப் பின்தான் வெற்றி அடைய முடியும்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 30 உ. (12-5-65)


## ஆசிரியர்கள்மீது கூடாத நடவடிக்கை

அரசியலில் தீவிரமாக ஈடுபட்ட ஆசிரியர்கள்மீது இப்பொழுதுள்ள சட்டவிதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இதன்படி குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவர் அல்லது வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர் என்றும் கல்விஅமைச்சர் விளக்கம் தெரிவித்துள்ளார். கல்வித்துறையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவ வேண்டியது அவசியம், ஆனால் கல்வி அமைச்சரின் இந்த நடவடிக்கை அதை ஏற்படுத்துமா வென்பது ஆராய வேண்டிய விஷயம்.

இதுவரை நடைபெற்ற விசாரணைகளிலிருந்து அரசியலில் ஈடுபட்ட ஐயாயிரம் ஆசிரியர்கள்மீது குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன வென்றும் இவற்றுள் இரண்டாயிரம் ஆசிரியர்கள் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டனரென்றும் இதற்குப் பொலிஸ் அறிக்கைகள் ஆதாரமாகவுள்ளன வென்றும் கல்வி அமைச்சர் கூறுகிறார். ஆசிரியர்கள் மட்டுமல்ல அரசாங்க ஊழியர்கள் நேரடியாக அரசியலில் பங்குபற்றக் கூடாதென்பது இப்பொழுதுள்ள சட்டம். ஆனால் சென்ற பொதுத்தேர்தல் சமயத்தில் இப்பொழுது ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்கத்திலுள்ள கட்சிகளோ எதிர்க்கட்சியிலுள்ள கட்சிகளோ ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்க வேண்டுமென்ற யோசனையை எதிர்த்து ஒரு வார்த்தைதானும் கூறவில்லை. உண்மையில் ஆசிரியர்களுட்பட அரசாங்க ஊழியர்களில் சில பிரிவினருக்கு அரசியல் உரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றே இக்கட்சிகள் தெரிவித்திருந்தன. இந்நிலையில் ஆசிரியர்கள் எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கையுடன் அரசியலில் ஈடுபட்டிருந்தால் அதில் வியப்புமில்லை; தவறுமிருக்க முடியாது. ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபட்டார்களென்பதற்கு பொலிசாரின் அறிக்கைகள் ஆதாரமாக இருக்கின்றனவென்று அமைச்சர் கூறுகிறார். சென்ற தேர்தல் காலத்தில் ஆசிரியர்கள் மட்டும் தானா அரசியலில் ஈடுபட்டார்கள்? வேறு அரசாங்க ஊழியர்கள் எவரும் ஈடுபடவில்லையா? இதற்குப் பொலிசாரின் அறிக்கைகள் எதுவும் இல்லையா? அதுமட்டுமன்றி பொலிசாரின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்ட ஆசிரியர்கள் எல்லோரும் என்ன முறையில் அரசியலில் ஈடுபட்டார்கள்? இப்பொழுது ஆட்சிப்பீடத்திலிருக்கும் கட்சிகளை ஆதரித்தவர்களும் அந்த ஐயாயிரம் ஆசிரியர்களுள் உள்ளனரா?

இக்கேள்விகளுக்கு அமைச்சர் என்ன பதில் சொல்வார்? அரசியலில் ஈடுபட்டதாக ஆசிரியர்கள் மீது மட்டும் குற்றம் சாட்டித் தண்டனை விதிப்பது பாரபட்சமான நடவடிக்கை மட்டுமல்ல பெரும் அநியாயமுங்கூட! கல்வி அமைச்சர் தாமே குற்றச்சாட்டைச் சுமத்தும் வழக்காளியாகவும் தீர்ப்பளிக்கும் நீதிபதியாகவும் தண்டனையை நிறைவேற்றுபவராகவும் இருக்கக் கூடாது!

ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட வேண்டுமெனினும் அவர்கள் கட்சி அரசியலில் தீவிரமாக ஈடுபடுவது கல்வி ஸ்தாபனங்களில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவ உதவி புரியாது என்பது உண்மையே ஆனாலும் சென்ற பொதுத் தேர்தலில் மட்டும் ஈடுபட்ட ஆசிரியர்களைத் தண்டிப்பது முறையுமல்ல, நீதியுமல்ல. இனிமேலும் அவர்கள் கட்சி அரசியலில் ஈடுபடாமலிருப்பதற்காக அவர்களுக்கு எச்சரிக்கை மட்டும் விடுத்தால் போதும்!

## ஆசிரியர் பணியில் 43 வருட சேவை

சண்டிலிப்பாய், புதன்

ஏறத்தாழ நாற்பத்து மூன்று வருடங்களாக ஆசிரியப் பணியாற்றி சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் வித்தியாலயத்திலிருந்து ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. ஆ. கல்லதம்பியை கௌரவிக்குமுகமாக மேற்படி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஓர் பாராட்டு விழா நடைபெற்றது. ஆசிரியர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

அவ்வூர் வழக்கறிஞர் திரு. என். ரி. நடராசா பாராட்டு விழாவிற்கு தலைமைதாங்கினர். திரு. க. சண்முகம் வரவேற்புரை நிகழ்த்தியதும் பாராட்டுப்பாமலர் படித்தளிக்கப்பட்டது.

ஆசிரியர்கள் திரு. பொன். முருகேசபிள்ளை, திரு. க. மழவராயர், வித்துவான் திரு. சி. சரவணமுத்து, திருமதி த. நமசிவாயம் ஆகியோர் ஆசிரியரின் சேவை நலன்களைப் பாராட்டிப் பேசினர்.

உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் பேசும்போது இவ் வித்தியாசாலையில் மாத்திரம் ஆசிரியர் முப்பத்தாறு வருடங்கள் தொடர்ந்துசேவைசெய்து ஊராலும் நன்கு மதிக்கப்பட்டமை மகத்தானதோர் சாதனையாகும் என்று குறிப்பிட்டார். திரு. கல்லதம்பிக்குப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழியும் வழங்கப்பட்டது.

## கம்போடியாவில் நேரு வீதி

நாங்பெங், மே 11

கம்போடியத் தலைநகர் நாங்பெங்கில் ஒருபிரதான வீதிக்கு ஜவஹர்லால் நேருவின் பெயர் வைக்கப்பட்டது. இந்த வைபவம் இளவரசர் சிஹோனக்கின் தலைமையில் நடந்தது.

## கிருஷிகதொழிலாளர் மந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

வட இலங்கை அரசாங்க கிருஷிக பண்ணைத் தொழிலாளர் சங்கம் தங்கள் ஊழியர்களின் குறைபாடுகளை மகஜர் மூலமாக விவசாய மந்திரிக்குத் தெரிவித்துள்ளது.

தங்கள் ஊழியர்களுக்கு வருடாந்த சம்பள உயர்வு சரிவர வழங்கப்படுவதில்லை என்பது பற்றியும் பல ஊழியர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாததுபற்றியும், கிளிநொச்சி; பரந்தன், முருங்கன், வவுனியா, திருநெல்வேலி ஆகிய தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களின் வீடுகளைத் திருத்தி அமைக்கவேண்டும் என்பதுபற்றியும் திருநெல்வேலி கிருஷிக தோட்டத்தில் சங்கத்திற்கென கட்டப்பட்ட கட்டடத்தைச் சங்கத்தின் பாவனைக்கு விடவேண்டும் என்பதுபற்றியும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மூன்றே மூன்று அதிக வாக்குகள்

லண்டன், மே 11

நேற்று திரு. வில்சனின் தொழிற்கட்சி அரசாங்கம் தனது தேசிய பட்ஜட்டை 3 அதிகப்படி வாக்குகளால் நிறைவேற்றியது. பட்ஜட்டை ஆதரித்து 299 வாக்குகளும், எதிர்த்து 296 வாக்குகளும் பதிவாகின.

## அந்தமானில் குடியமர்த்தத் தயார்

கொழும்பு, செவ்

இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்படும் இந்தியர்களை அந்தமானிலும், நிக்கோபார் தீவிலும் குடியமர்த்த தான் தயாராய் இருப்பதாக ஒரு தனிப்பட்ட ஸ்தாபனம் இந்திய ஹைகமிஷனருக்குத் தெரியப்படுத்தியிருக்கிறது. அவர்களை இந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்காகபோக்குவரத்து வசதிகள் செய்துதருமாறு இரு நாட்டு அரசாங்கங்களையும் அந்த ஸ்தாபனம் கேட்டிருக்கிறது.

## இராமகிருஷ்ணமடத்தில் வெசாக் கொண்டாட்டம்

பம்பலப்பிட்டி, செவ்

வெசாக் தினத்தை முன்னிட்டு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடத்தில் மே மாதம் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை புத்தருடைய போதனைகள் பற்றியும் அவரது வாழ்க்கை பற்றியும் பேச்சுக்களும் பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும் பேச்சாளர்களாக திரு. வி. எப். குணரத்தினவும், செல்வி புஷ்பா செல்வநாயகமும் சுவாமி ஸ்ரீரங்கானந்தரவும் கலந்துகொள்கின்றார்கள். வண. இந்துருவ பன்ன திஸ்ஸ தேரோ கூட்டத்திற்கு தலைமை வகிப்பார்.

## ஐயாறன் எழுதுவது

சிதம்பரத்திலே எங்கு தங்கியிருந்தேன் தெரியுமா? ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் உள்ள 'ஷண்டையார் மான்ஷன்ஸ்' எனும் 'ஹோட்டல் பாலஸ்' மாளிகையில்தான். இரண்டு வருடங்களுக்கு முன் சிவ ஜிகணேசன் அதைத் திறந்து வைத்ததாயும், அங்கு அறைகள் வசதியாக இருக்குமென்றும் ஒரு நண்பர் கூறியிருந்தார். ஒருவருக்கான 'சிங்கிள் ரூமில்' மின் வசதி, மின் விளக்குகள், படுக்கை, மேசை, நாற்காலி, குளிக்கும் அறை முதலிய வசதிகளெல்லாம் உள்ளன. நாள் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் தான். கொழும்பு ஹோட்டலிலென்றால் இருபது ரூபாய் இருக்கும். சாப்பாடு, சிற்றுண்டி எல்லாம் நல்ல முறையிலுள்ளன. 'ஏர்கண்டிஷன்' செய்துள்ள ரூமில் சாப்பிட நல்ல வசதியுண்டு. ஆளுக்கு 12 சதம் தான். கூட்டம் தான் அதிகம். உற்சவ காலத்தில் இங்கு அறைகள் கிடைப்பது கஷ்டம்.

முன்னரெல்லாம் யாத்திரிகர்கள் சத்திரம், மடம் முதலியவற்றில் தங்கியிருப்பர். இப்போது அவை பெரிதும் மறைந்து, எல்லாம் ஹோட்டல்கள், லாட்ஜிங்குகளாக மாறி வருகின்றன. புதிது புதிதாக பல விடுதிகள் கட்டப்படுவதைப் பார்த்தேன்.

* * *

தூரத்திலிருந்துவரும் தன் அடியார்கள் வசதியாகத் தங்கி இருந்து தன்னைத் தரிசிக்க, ஸ்ரீ நடேசப் பெருமான் அருள் செய்துள்ளார்.

* * *

அன்று சித்திரைத் திருவோணம் ஸ்ரீ நடேசப்பெருமானின் அபிஷேகதினம். பக்தர்கள் கூட்டம்தான் எவ்வளவு!

அதிகாலையில் கோவிலிலிருந்து இனிமையான திருமுறை இசை ஊர் மக்களை எல்லாம் தட்டி எழுப்புகின்றது. திருப்பனந்தாள் ஆதீனத்தார் ஓர் ஓதுவாமூர்த்தியை நியமித்து இதற்கான ஒழுங்கு செய்துள்ளனர். மாலையிலும் ஒரு மணிநேரம் திருமுறைகள் பாடப்பெறுகின்றன.

ஆனாலும் நாவலர் பள்ளிக்கூடத்தில் படிப்பவர்களைத் தவிர மற்ற மாணவ மாணவிகளுக்கு ஒரு தேவாரம் கூடத் தெரியவில்லை. தேவாரம் தெரியுமா என்று சில குழந்தைகளைக் கேட்டேன்; ஆறு வயதுள்ள ஒருசிறுவன் 'தெரியுமே' என்று சொல்லிவிட்டு, "அத்தை மடி மெத்தையடி" என்ற சினிமாப் பாட்டை உற்சாகமாகப் பாட ஆரம்பித்துவிட்டான்! மூன்று வயதில் 'தோடுடைய செவியன்' எனும் பதிகம் பாடிய ஞானக்குழந்தை அவதரித்த நாட்டில் இன்றைய நிலையைக் காண மிகப் பரிதாபமாக இருந்தது.

சமயக் கல்வியை போதிக்கப்படாதென்று இந்திய அரசாங்கம் தவறான கொள்கையைக் கடைப்பிடிப்பதுதான் இந்த அவல நிலைக்குக் காரணமென்றும், மாணவ உலகத்தில் ஏற்படும் பல தீங்குகளுக்கும் இது காரணமென்றும், இந்தக் கொள்கையை மாற்றுவது பற்றி இந்திய அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும், ஒரு பெரியவர் தெரிவித்தார். இவ் விஷயத்தில் நம் இலங்கையை இந்தியா பின்பற்றுவது நல்லதாகுமல்லவா?

* * *

இம்முறை சிதம்பரம் சென்றதன் முக்கிய நோக்கம், ஸ்ரீ இலக்கண சுவாமிகள் எனும் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி தம்பிரானின் குருபூசைக்காகத்தான். அவர் யாரென்று தெரியும் தானே! ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்குப் பின், ஈழத்திலிருந்து 14 வயதில் இந்தியா சென்று துறவியாகி, தமிழ்

(6-ம் பக்கம் பார்க்க)

# நாட்டிலும் நகரிலும்

சித்திரை 28 வந்து போய்விட்டது. வடபகுதியிலுள்ள கமக்காரரும் மீனவர்களும் ஒரு பெரிய பெருமூச்சு விட்டு கடவுளை ஸ்தோத்திரம் செய்வார்கள். சில வருடங்களுக்கு முன்பு சித்திரை 28 என்றால் எல்லோருக்கும் நெஞ்சடி. வெளியூர் போகிறவர்கள் பயணத்தை ஒத்திவைப்பார்கள், மீனவர்கள் வள்ளங்களை இரண்டு மூன்று நாட்களுக்குக் கட்டிவைத்துவிடுவார்கள். கமக்காரன் ஆகாயத்தைப் பார்த்து ஏங்கிக்கொண்டேயிருப்பான். காற்று மாறும், கருமுகில் கூட்டங்கள் வானத்தில் திரளும், சொல்லிவைத்தாற்போல இருபத்தேழாம் திகதி இரவு புயற்காற்றின் உறுமலுடன் மழை அடிக்கத் துவங்கும். இருபத்தெட்டாம் திகதி ஊர் முழுவதும் வெள்ளம் போட்டுவிடும்.

சித்திரைக் குழப்பம் என்று பொதுவாக இதைச் சொல்வார்கள். சிறுபோக வேளாண்மை செய்பவர்களுக்கும் வாழை முதலிய பயிர் செய்யும் தோட்டக்காரருக்கும் இதனால் சொல்லொணாச் சேதமுண்டாகும். பருவகாலங்கள் மாறிக்கொண்டு வருவதனாலோ என்னவோ சில காலமாக இயற்கை செய்யும் இந்த அழிவுக்கூத்து நம்மைவிட்டு அகன்றிருக்கிறது.

வடபகுதியில் வரவேண்டிய சித்திரைக் குழப்பம் தானோ இலங்கையின் தென்மேற்குப் பகுதியில் சித்திரை 23, 24ம் திகதிகளில் ஏற்பட்டது? இருக்க முடியாது, ஏனென்றால் கொழும்புபிரதேசங்களில் இந்நாட்களில் கடும் மழை பெய்வது சர்வ சகஜமான விஷயம். இருந்தபோதிலும். யாழ்ப்பாணப்பகுதியில் இருபத்தேழாம் திகதி இரவு ஒரு சிறு புயற்காற்று கொஞ்சநேரம் வீசியதை எத்தனை பேர் கவனித்தார்களோ? மப்பும் மந்தாரமும் சூரியனை இன்னும்தான் மறைத்துக்கொண்டிருக்கின்றன. இயற்கையின் விளையாட்டை யார் அறிவார்கள்!

* * *

கண்ணனும் பொன்னனும் காட்டுக்கு விறகு வெட்டப் போன சமயத்தில் கரடியைச் சந்தித்த... பிணம்போல் படுத்துவிட... பொன்னன் மரத்தில் ஏறிக்கொண்ட கதையை பாலபாடத்தில் படித்திருக்கிறோம். இதுபோன்ற ஒரு சம்பவம் பதுளைக்கருகாமையில் நடைபெற்றதாம். திஸஹாமியும் நண்பனும் விறகு வெட்டப் போனபோது குட்டிகளுக்குப் பாலூட்டிக்கொண்டிருந்த தாய்க் கரடியிடம் அகப்பட்டுக்கொண்டார்கள். கரடியோடு ஏற்கனவே பழக்கமுள்ள திஸஹாமி கரடியோடு மல்யுத்தம் செய்து அதைக் கீழே தள்ளி அமுக்கிப் பிடித்துக்கொண்டு உதவிக்கு வரும்படி நண்பனைக் கூப்பிட்டான். நண்பனோ, புத்தகத்தில்வரும் பொன்னன்போல, மரத்தில் ஏறிக்கொண்டான். அது மட்டுமல்ல. வெந்த புண்ணில் வேலை வீசியது போல இரு கண்களையும் இறுக்கிப் பொத்திக்கொண்டான். திஸஹாமியும் கரடியும் போட்ட சண்டையைக் கண்டு பயந்து கண்ணைப் பொத்திக்கொண்டானோ அல்லது திஸஹாமியின் உயிர் போவதைக் காண சகிக்காமல் அவ்விதம் செய்தானோ தெரியவில்லை திஸஹாமியின் நண்பனைப்போல ஆபத்து நேரத்தில் கண்ணை மூடிக்கொண்டு கைவிட்டுவிட்டு ஓடும் 'நண்பர்கள்' இவ்வுலகில் பலர் இருக்கிறார்கள். அவர்களை இன்னாரென்று அறிந்து கொள்வோமானால் 'கரடி'களிடம் அகப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படமாட்டாது.

* * *

புத்தர் பெருமான் அவதரித்ததும், ஞானோதயம் பெற்றதும், சமாதியெய்தியதுமாகிய முப்பெருமை வாய்ந்தது வருகிற சனிக்கிழமை வரும் வைகாசி விசாகம், பௌத்தர்கள் கொண்டாடும் இம்மிகப் பெரிய திருவிழாவின் போது கொழும்பு மாநகரம் பந்தல்களாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு ஜெகஜோதியாக விளங்கும் சில பந்தல்களுக்கு ஐயாயிரம் பத்தாயிரம் என்று செலவழிப்பார்கள். வர்ணப்பூச்சுகளாலும் கடதாசிகளாலும் ஆக்கப்படும் இந்த சோடனைகளைக் கடந்த சில வருடங்களாக மழை வந்து கெடுத்துவிட்டது, அங்கே முகாம் போட்டிருக்கும் வர்ணபகவான் இந்த வருடம் என்ன செய்யப்போகிறாரோ தெரியவில்லை.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தென் வியட்நாமில்

# தீவிர தாக்குதல் நடத்த கொரில்லாக்கள் திட்டம்

## வடவியட்னுமில் அமெரிக்க குண்டு வீச்சில் 20 கட்டடங்கள் நாசம்

சைகோன், மே 11

தென்வியட்நாமிலுள்ள அமெரிக்க விமானங்கள் நேற்று வடக்கு வியட்நாமில் கட்டடங்களையும், இராணுவ இலக்குகளையும் சேதப்படுத்தின. அமெரிக்க விமானங்களின் குண்டு வீச்சுக்களினுல் இருபது கட்டடங்கள் முற்றுக நாசமானதென்றும் பத்துக் கட்டடங்கள் சேதமடைந்தன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ நிபுணர்கள் வியட்காங் கொரில்லாக்களின் சாதகமான இடமொன்றில் நவீன விமானத்தளமொன்றை அமைப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர். இதன் மூலம் வியட்காங் கொரில்லாக்களின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்று அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வியட்காங் கொரில்லாக்கள் தீவிரமான தாக்குதல்களை நடத்தத் திட்டமிடுவதாகவும் இத்தாக்குதல்கள் அனைத்தையும் முறியடிக்க அமெரிக்கா தயார் நிலையில் இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

# 'எல்லைப்பிரச்னையை அமைதியாக தீர்த்துக்கொள்க'

## இந்தியா, பாகிஸ்தானுக்கு கானு அதிபர் வேண்டுகோள்

ஆக்ரா, மே 11

4-வது ஆசிய ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டை நேற்று கானு ஜனதிபதி டாக்டர் நிக்ருமா ஆரம்பித்துவைத்தார்.

இந்த மகாநாட்டில் 70 நாடுகளைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் 600 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

டாக்டர் நிக்ருமா அப்போது பேசுகையில் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் எல்லைத்தகராறை அமைதியாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

மலேசியா, இந்தோனேஷியத் தலைவர்கள் பிரச்னைக்கு அமைதித்தீர்வு காணுமுகமாக பேச்சுக்களைத் துவக்கவேண்டும் என்றும் அவர் கூறினர். ஏகாதிபத்தியவாதிகள் இப்பகுதியிலிருந்து வெளியேறினுல்தான் இப்பிரச்னைகளுக்கு வழி ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வியட்நாமில் ராணுவத்தீர்வு சாத்தியமில்லை எனறும் அங்கு அமைதிப் பேச்சுக்கு முன் அந்நிய ராணுவத்தினர் வெளியேறவேண்டும் என்றும் டாக்டர் நிக்ருமா கூறினர்.

மகாநாட்டில் பல ஆபிரிக்க பிரதிநிதிகள் தென்ரொடீஷியாவிலிருந்து இந்தியா தனது ராஜதந்திரத் தூதுவரை திருப்பி அழைத்துக்கொண்டது குறித்து பாராட்டுத் தெரிவித்தார்கள்.

மகாநாட்டில் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# லண்டனில் "நேட்டோ" மந்திரிகள் மகாநாடு

## பிரான்ஸ் கருத்து வேற்றுமை

லண்டன், மே 11

நேட்டோ மந்திரிகள் மகாநாடு 15 ஆண்டுகளுக்குப்பின் முதல்தடவையாக இன்று லண்டனில் கூடியது.

15 நாடுகளைக்கொண்ட இம்மகாநாடு 3 தினங்களுக்கு நடைபெறும்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் மகாநாட்டை துவக்கி வைத்தார்.

வியட்நாம், டொமினிக்கன் பிரச்னைகள் மகாநாட்டில் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு மேற்கு உறவுகளில் ஜெர்மனியைத் தவிர வேறு உண்மையான முன்னேற்றம் எதுவும் இதுவரை இல்லை என நேட்டோ பொதுக்காரியதரிசி கூறினர்.

பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி மகாநாட்டில் தீவிர பங்கெடுத்துக்கொள்ள மாட்டார் எனக்கூறப்படுகிறது. ஜெர்மன் ஐக்கியம்போன்ற ஐரோப்பிய பிரச்னைகளை ஐரோப்பாவே தீர்த்துக்கொள்ளவேண்டும் என் பிரெஞ்சு அதிபர் டிகால் கருதுவதே இதற்குக் காரணம்.

ஆனுல் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் இதில் பங்கெடுக்க வேண்டும் என இதர நாடுகள் விரும்புகின்றன.

# காந்திஜி நூற்றுண்டுக் கமிட்டி

புதுடில்லி, மே 11

காந்திஜியின் நூற்றுண்டு விழாக் கொண்டாட்டக் கமிட்டிக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைவராக இருக்க இசைந்திருப்பதாய் கல்விமந்திரி திரு. சக்ளா கூறினர். உலகிலுள்ள பல பிரபலஸ்தர்கள் இக்கமிட்டியில் இருப்பார்கள்.

# கோபாலரெட்டி துணைத் தலைவர்

புதுடில்லி, மே 11

லோகசபையில் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக திரு. பி. கோபால்ரெட்டி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறர். அவருடன் போட்டியிட்ட ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் போட்டியிலிருந்து விலகிக்கொண்டார்.

# 4-ம் டெஸ்ட்

பிரிட்ஜ்டவுன், மே 11

பிரிட்ஜ்டவுனில் நடைபெற்று வரும் 4-வது கிரிக்கெட் டெஸ்டில் ஆஸ்திரேலியா தன் 2-ம் இன்னிங்ஸில், நேற்று ஆட்டநேர இறுதிவரை 2 விக்கெட் நஷ்டத்திற்கு 189 ரன்கள் எடுத்தது.

முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 6 விக்கெட் நஷ்டத்திற்கு 650 ரன்கள் எடுத்து ஆட்டத்தை முடித்துக்கொண்டது.

மேற்கிந்தியா முதல் இன்னிங்ஸில் 573 ரன்கள் எடுத்தது.

# கிரீஸ், துருக்கி

லண்டன், மே 11

சைப்பிரஸ் பிரச்னையில் அமைதித் தீர்வு காணும் சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்க கிரீஸ், துருக்கியும் இணங்கியுள்ளன.

# மலேசியாவுக்கு வலுவானவிமானப்படை

கோலாலம்பூர், மே 11

மலேசியா, காமன்வெல்த் நாடுகளின் உதவியுடன் வலுவான விமானப்படை ஒன்றை அமைக்கத் திட்டமிட்டிருப்பதாய் உதவிப் பிரதமர் துன் அப்துல் ரஸாக் கூறினர்.

# கோஸிஜினுக்கு அழைப்பு

மாஸ்கோ, மே 11

ரஷ்யப்பிரதமர் கோஸிஜின் இந்தோனேஷியாவுக்கும், கானுவுக்கும் விஜயம் செய்யுமாறு விடுக்கப்பட்ட அழைப்புக்களை ஏற்றுக்கொண்டிருக்கிறர்.

# சிங்கப்பூர் பிரதமர்

புதுடில்லி, மே 11

சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான்யூ, பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்துப் பேசினர்.

# ஒட்டகத்தைவிட்டு ஓட்டம் பிடித்தனர்

புதுடில்லி, மே 11

நேற்று இந்தியப் பிரதேசத்திற்குள் 10 மைல் ஊடுருவி வந்த பாகிஸ்தான் ரேஞ்சர் கோஷ்டி ஒன்றை ராஜஸ்தான் எல்லைப் போலீசார் விரட்டியடித்தனர். இரு சாராருக்குமிடையே ஒன்றரை மணி நேரம் சண்டை நடைபெற்றது.

பாகிஸ்தானியரைப் போலீசார் தடுத்தபோது அவர்கள் சுட்டனர். ராஜஸ்தானியர் திருப்பிச் சுடவே ஒட்டகங்களில் வந்த அவர்கள் இரு ஒட்டகங்களை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

கிழக்கு எல்லையில் பாகிஸ்தானியர் நேற்று தொடர்ந்து சுட்டனர். திரிபுராவில் நதிக்கரையில் கட்டுமான வேலையில் ஈடுபட்டிருந்த இந்தியத் தொழிலாளர்மீது அவர்கள் சுட்டனர்.

லத்திதிலா துமாபாரி எல்லையில் நேற்று அமைதி நிலவியதாயும் அறிவிக்கப்பட்டது.

# இந்தியா படைகளை குவிப்பதாக புகார்

ராவல்பிண்டி, மே 11

கச்சிலுள்ள ரன் பகுதியிலும், கிழக்கு-மேற்கு இரு எல்லைகளிலும் இந்தியா துருப்புக்களைக் குவித்து வருவதை கவனத்தில் வைக்குமாறு பாகிஸ்தான் வெளிநாட்டுத் தூதராலயங்களுக்கு அறிவித்திருக்கிறது.

இது பரஸ்பர நல்லெண்ணத்தை மீறிய செயலாகும் என்று அது கூறியிருக்கிறது.

பாகிஸ்தானிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் நேற்று ஜனதிபதி அயூப்கானைச் சந்தித்துப் பேசினர். அப்போது வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோவும் உடனிருந்தார்.

# அர்ஜண்டினுவில் ஈரான் மன்னர்

புவனஸ் அயர்ஸ், மே 11

ஈரான் மன்னர் ஷாவும், ராணி பாராவும் அர்ஜண்டினுவுக்கு விஜயம் செய்திருக்கிறர்கள்.

# அமெரிக்கா பேச்சு நடத்துகிறது

புதுடில்லி, மே 11

அமெரிக்க ஆயுதங்களை இந்தியாவுக் கெதிராக பாகிஸ்தான் உபயோகித்தது குறித்து அந்த நாட்டுடன் அமெரிக்கா பேச்சு நடத்த துவங்கியிருப்பதாய் டில்லிக்குக் கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

(5-ம் கலத் தொடர்ச்சி)

அவர்கள் அருகருகே துயில்கின்றனர். அவர்களது கல்லறை வெண்சலவைக்கல்லில் [illegible] மீது கைகோர்த்தபடி காதலர்கள் இறக்கும் சிலை செதுக்கப்பட்டுள்ளது.

# ஷேக்அப்துல்லா கைதுக்கு

## வினேபா, ஜயப்பிரகாஷ் கண்டனம்

கராச்சி, மே 11

ஷேக் அப்துல்லா கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து காஷ்மீரில் நேற்று பெரிய அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாயும், போலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதாயும் வர்த்தகம் ஸ்தம்பித்ததாயும் கராச்சி ரேடியோ அறிவித்தது.

101 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும், இவர்களில் முன்னுள் காஷ்மீர் பிரதமர் பக்ஷிகுலாம் முகம்மதுவின் மூத்த சகோதரரும் ஒருவர் என்றும் அது மேலும் அறிவித்தது. காஷ்மீரில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பை இப்போது ராஜ்ய அரசாங்கத்திடமிருந்து இந்திய உள்நாட்டுமந்திரி திரு. நந்தா தாமே எடுத்துக் கொண்டுவிட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

நேற்று பலமுறை அவர் காஷ்மீர் அரசாங்கத்துடன் டெலிபோனில் பேசியதாயும் அடிக்கடி பல உத்தரவுகளைப் பிறப்பித்ததாயும் அது மேலும் அறிவித்தது.

ஷேக் அப்துல்லாவுடன் சிறைப்படுத்தப்பட்ட மிர்ஸா அப்துல்பெய்க், உதகமண்டலம் வந்ததுமுதல் சுகவீனமுற்றிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

ஷேக்அப்துல்லா கைதுசெய்யப்பட்டது குறித்து பூதானத் தலைவர் ஆச்சார்யா வினேபா பாவேயும், ஜயப்பிரகாஷ் நாராயணும் கண்டனம் தெரிவித்திருக்கிறர்கள். ஷேக்அப்துல்லா தனது நிலைமையை விளக்க சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என அவர்கள் குறை கூறியிருப்பதாய்க்கூறப்படுகிறது.

லண்டனிலுள்ள காஷ்மீரிகள் ஷேக் கைதுசெய்யப்பட்டிருப்பதை ஆட்சேபித்து, விடுதலை செய்யுமாறு கேட்டிருக்கிறர்கள். அப்துல்லா கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து கராச்சியிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

ஆனுல் காஷ்மீரில் அமைதி நிலவுவதாகவும், கலகசம்பவங்கள் எதுவும் இல்லையென்றும் இந்திய அறிவிப்பு ஒன்றுகூறுகிறது.

நேற்று ஸ்ரீநகரில் பெரிய மொகரம் ஊர்வலம் நடைபெற்றதாயும் அங்குள்ள உல்லாசப் பிரயாணிகளும் இதில் பங்குபற்றினர்கள் என்றும் அந்த அறிவிப்பு மேலும் கூறியது.

# வடவியட்னும் தலைநகர் காலி செய்யப்படுகிறது

## அமெரிக்க விமான தாக்குதலை எதிர்பார்த்து நடவடிக்கை

சைகோன், மே 11

அமெரிக்க, தென்வியட்னும் விமானங்கள் வடவியட்னுமில் நேற்று புதிய தாக்குதல்களை ஆரம்பித்தன. இத்தாக்குதலில் 5 அமெரிக்க விமானங்கள் சுடப்பட்டதாய் ஹானேய் அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

அதேசமயம் அமெரிக்கத் தாக்குதலை எதிர்பார்த்து இப்போது ஹானேய் நகரம் காலி செய்யப்படுவதாய் அறிவிக்கப்படுகிறது.

வியட்காங்கியருக்கு உதவி செய்தால் தாக்குதல் நடத்தப்படும் என அமெரிக்கா மிரட்டியபோதிலும் அவர்களுக்கு உதவியாக சீனத்தொண்டர்கள் அனுப்பப்படுவார்கள் என சீன பிரதம சேனாதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

நேற்று தென்வியட்னுமில் ஏற்பட்ட கடும்சண்டையில் 800 அரசாங்க துருப்புகள் கொல்லப்பட்டும், காயமடைந்தும், காணுமற்போயும் உள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

கடந்த 4 நாட்களில் நடைபெற்ற சண்டைகளில் 209 வியட்காங்கியர் பலியானுர்கள் என்றும் 100 பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர் என்றும், ஏராளமான ரஷ்ய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

# 600வருட காதல் சென்ற மாதம் பூர்த்தி

பார்சலோனு, மே 11

ஓர் இளம் ஸ்பானிய போர்வீரனுக்கும் செல்வந்தனுன ஒரு நிலக்கிழாரின் மகளுக்குமிடையே இருந்துவந்த 600 ஆண்டுகாலக் காதலின் கதை சென்றமாதம் முற்றுப் பெற்றுவிட்டது.

அந்தக் காதலனின் பெயர் டீகோமார்ஸில்லாஸ். காதலியின் பெயர் இசபெல் செகுராஸ், அவர்களின் திருமணத்திற்கு பெற்ளேர் ஒப்பினர். ஆனுல் டீகோவின் குடும்பத்திற்கு இடுக்கண் வந்தது. அதனுல் திருமணத்தை ஒத்திப் போடுமாறு இசபெல்லின்பெற்ளேர் வற்புறுத்தினர். அறுநூறு ஆண்டுகளுக்குமுன் திருமணத்தை ஒத்திப் போடுவது சாதாரண நிகழ்ச்சியாக இருந்தது.

டீகோ போர்வீரனுகி செல்வம் தேடப்புறப்பட்டான். பல்லாண்டுகளுக்குப் பிறகு பெரும் புகழுடன் அவன் ஊர் திரும்பினுன். ஆனுல் அவன் ஊரிலில்லாத காலத்தில் இசபெல் வேருெருவருக்கு நிச்சயிக்கப்பட்டுவிட்டாள். திருமணத்தன்று காலையில் அவளிடம் பிரியாவிடை பெறுவதற்காக டீகோ சென்ருன்.

தனக்குப் பிரியாவிடை முத்தம் வேண்டுமென்று இசபெல்லைத் டீகோ கேட்டான். ஆனுல் பண்புள்ள அவள் முத்தம்தர மறுத்துவிட்டாள். அதனுல் டீகோ அவளது காலடியில் விழுந்து இறந்தான்.

டீகோவின் இறுதிச்சடங்கு முடிவதற்காக இசபெல்லாவின் திருமணம் ஒத்திவைக்கப்பட்டது. டீகோவின் மரண ஊர்வலத்தில் மணக்கோலத்துடன் இசபெல்லா கலந்துகொண்டாள். டீகோவை வைத்திருந்த சவப்பெட்டியை நோக்கிவந்தபோது முந்தின நாள் அவன் கேட்டும் மறுத்த முத்தத்தைக் கையில் வைத்து காற்றில் விட்டாள். பின்னர் பலிமேடைக்கருகில் முழந்தாள் பணிந்தாள். ஆனுல் அவள் அப்புறம் எழுந்திருக்கவே இல்லை. பலிமேடை முன்பிரார்த்தனை செய்தவாறே அவளது ஆவிபிரிந்துவிட்டது. அக்காதலர்கள் வெவ்வேறு இடங்களில் புதைக்கப்பட்டிருந்தனர். அவர்களது பிரிவில் மனமிரங்கிய அந்நகர்மாந்தர் இருகல்லறைகளையும்தோண்டி அவர்கள் மணம் முடிக்கவிருந்த பண்டைய மாதா கோவிலின் கல்லறையில் அருகருகே புதைத்துவிட்டனர். அறுநூறு ஆண்டுகளுக்குப் பின் மண்மாதாவின் மடியில்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "இளைஞர் சங்கங்கள் சமூக வளர்ச்சிக்கு உதவி"

யாழ்ப்பாணம், புதன்

இளைஞர் சங்கங்கள் சமூகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. இவ்வித சங்கங்கள் அனேகமாக இப்போது அறிவு வளர்ச்சிக்கு உதவும் நூல் நிலையங்கள் நடத்திவருவது பெரும் சமூகப்பணியென்றே கூறவேண்டும். இந்தப் பணியுடன் இளைஞர்களிடையே இருந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இந்த சங்கங்கள் ஒன்று சேர்ந்து உழைத்தால் நாட்டுக்கே இச்சங்கங்கள் பெரும் உதவி செய்வதாக இருக்கும்".

இவ்வாறு கொட்டடி சனசமூகசேவா இளைஞர் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் வி. பரராசசிங்கம் பேசுகையில் கூறினார்.

சங்கத்தலைவர் திரு செ. ஜெயபதி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் பேசுகையில் ஒரு சங்கத்தின் வளர்ச்சிக்கும் ஐக்கியமும் ஒத்துழைப்பும் அவசியமென்றார்.

யாழ்ப்பாண மாநகரசபை 12-ம் வட்டார அங்கத்தவர் ஜனாப் எம் எம். சுல்தான் பேசுகையில் சங்கத்தின் வளர்ச்சிக்கு தம்மாலான உதவி செய்ய தாம் எப்போதும் தயாராக இருப்பதாகவும் வட்டாரத்துக்குத் தேவையானவற்றை சங்கம் தெரிவித்தால் தாம் அவற்றை நிறைவேற்ற முயற்சி மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி இளைஞர் கையில்தான் தங்கியிருக்கிறதென்றும் சமூக நலுக்கு இளைஞர் அயராது பாடுபட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாநகர சபை 13-வட்டார அங்கத்தவர் திரு கே. வி. தெய்வேந்திரன் பேசுகையில் கொட்டடியில் ஒரு நிலையான சிறந்த முறையில் அமைந்த நூல் நிலையத்தை அமைக்க தம்மாலான முழுமுயற்சியையும் வெகுவிரைவில் மேற்கொள்ளவிருப்பதாக உறுதி தெரிவித்தார். இவ்வித முயற்சிக்கு எல்லோரது ஒன்றுபட்ட ஒத்துழைப்பும் அவசியம் என்பதை அவர் வலியுறுத்தினார்.

தலைவர் திரு ஜெயபதி பேசுகையில் இளைஞரின் ஒற்றுமையும் களியா உழைப்புந்தான் சங்கத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமென்றார்.

காரியதரிசி திரு செல்வநாயகம் நன்றி கூறினார்.

விழாவையொட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டி, விளையாட்டுப்போட்டி, விநோத உடைப்போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி பரராசசிங்கம் பரிசில்களை வழங்கினார்.

## சென்னை முதல்வரிடம் காட்டப்படும்

புதுடில்லி, மே 11

ஆட்சிமொழிச் சட்டத்திற்கு நகல் திருத்தம் எதுவும் இறுதியாக்கப்படுமுன், அதைப் பார்க்கும் வாய்ப்பு சென்னை ராஜ்ய முதன் மந்திரிக்குக் கிடைக்குமென ராஜ்யசபையில் ஒரு கேள்விக்குப் பதிலளித்த உள்நாட்டுலாகா துணை மந்திரி திரு. ஹார்த்தி கூறினார்.

## அணுக்குண்டு காகிதப்புலியாம்

பீகிங், மே 11

அணுக்குண்டு, ஒரு காகிதப் புலி என சீன பிரதம தளபதி கூறினார்.

REGAL - JAFFNA
NOW SHOWING
PETER CUSHING
in
NIGHT CREATURES
(Eastman - Color)

## இ. போ. ச. எழுதுவினைஞர் மந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

சென்றவார இறுதியில் தேசிய மயசேவைகள் மந்திரி திரு வி. ஏ. சுகததாசா வடபகுதிக்கு விஜயம் செய்திருந்த போது இ. போ. ச. யாழ். எழுதுவினைஞர் சங்கத்தினர் தங்கள் குறைபாடுகளைத் தெரிவிக்கும் மகஜர் ஒன்றை மந்திரியிடம் கொடுத்தனர்.

மற்றைய கூட்டுஸ்தாபனங்களில் கடமையாற்றும் எழுதுவினைஞர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தைவிட குறைந்த சம்பளமே இ. போ. ச. எழுதுவினைஞர்களுக்கு வழங்கப்படுவதாகவும் இ. போ. ச. வில் உள்ள போக்குவரத்து தொழில் பிரிவுகளை சேர்ந்த ஊழியர்களின் சம்பளங்களில் மாற்றம் செய்யப்படாதபோதிலும் எழுதுவினைஞர்களின் சம்பளத்தில் திருத்தம் எதுவும் செய்யப்படவில்லை என்றும் வாழ்க்கைச் செலவு உயர்ந்து வருவதால் இதனையொட்டி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மகஜரில் கோரப்பட்டுள்ளது.

எழுதுவினைஞர் 2ம் 3ம் தர பதவி உயர்வுகளுக்கான பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தவேண்டுமென்பது குறித்தும், சம்பள உயர்வு, தற்காலிக எழுதுவினைஞர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்பது குறித்தும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 500 ஏக்கரில் வெங்காயம் செய்கை பண்ணஏற்பாடு

பருத்தித்துறை, செவ்

வடமராட்சிப் பகுதியில் கூடுதலான வெங்காயச் செய்கையேற்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன் வெங்காயக்கூடு பின்னும் தொழிலை விஸ்தரிப்பதுபற்றியும் ஆலோசனை செய்யுமுகமாக வடமராட்சிப் பகுதிக் காரியாதிகாரி காரியாலயத்தில் மகாநாடொன்று கூட்டப்பட்டது.

இம் மகாநாட்டில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளும் பயிர்ச் செய்கைக் குழுப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

உடுப்பிட்டி எம். பி. திரு மு. சிவசிதம்பரம இம்மகாநாட்டில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

வடமராட்சியில் 500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் வெங்காயம் செய்யப்பட முயற்சி எடுக்கப்படவேண்டுமெனவும் இப்போது வெங்காயத்துக்கு கார்த்திகை, தை மாதங்களில் ருத்தல் ஒன்று 31 சதவீதம் கூடுதல் விலை கொடுக்க நிர்ணயிக்கப்பட்டிருப்பதுடன் வெங்காயத்தைப் பாதுகாக்க மண்டபங்கள் அமைக்க சங்கங்களுக்கும் விரும்பும் தனி நபர்களுக்கும் ரூ.1550 நீண்டகால கடனாகவும் வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளதென்றும் திரு. சிவசிதம்பரம் கூறினார். அத்துடன் "வெங்காயத்தைச் சங்கத்தில் கொடுத்ததும் பாதிப்பணம் உடன் கிடைக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. நெல்லைவிட வெங்காயமும் புகையிலையுமே உடன் காசு தரும் பயிர்களாகும். ஆகவே மனம்வைத்தால் இந்த ஆண்டில் நம் இலட்சியமான 500 ஏக்கர் நிலத்தில் பயிர்செய்யும் முயற்சியில் வெற்றி

(6ம் பக்கம் பார்க்க)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
மொடோர்ன் (பதுளை) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்

எனக்கு
மிகவும்
பிரியமானது



CEYLON CHOCOLATES LTD
கன்டொஸ்
உயர்ந்த ரகச் சொக்கலேற்று




ஏகவிநியோகஸ்தர்கள்:
ஷோ வலஸ் அன் ஹெஜெஸ் லிமிட்டெட்,
கொழும்பு - 3
RAVI-CCL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'யங்ரைகேர்ஸ்' மீண்டும் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண "யங்ரைகேர்ஸ்" விளையாட்டுக் கழகத்திற்கும் மானிப்பாய் "கோல்டன்ஸ்" கிரிக்கெட் கழகத்திற்கும் மானிப்பாயில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் யங்ரைகேர்ஸ் ஒரு இனிங்ஸ் 68 ரன்களாலும் வெற்றியீட்டியது.

கோல்டன்ஸ் தனது இரு ஆட்டங்களிலும் முறையே 35, 42 ரன்களை எடுத்தது. யங்ரைகேர்ஸ் தனது முதல் ஆட்டத்தில் 145 ரன்களை எடுத்தது. இதில் பெனடிற், யீவகுஜா முறையே 63, 13 ரன்களையும் லூயிஸ் தனது ஆட்டத்தை இழக்காமல் 42 ரன்களையும் எடுத்தனர். சேவியர், பெனடிற், கரேன் ஆகியோர் இரு ஆட்டங்களிலும் முறையே 9, 7, 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

## கென்னடிகோஷ்டி வெற்றி

சுழிபுரம் செவ்.

தொல்புரம் கென்னடி கழகத்தினருக்கும் மூளாய்வாணி நிகத வாசிகசாலை யூனியன் விளையாட்டுக் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கென்னடி கழகத்தினர் வெற்றி பெற்றனர். கென்னடி விளையாட்டு மைதானத்தில் போட்டி நடைபெற்றது. கென்னடி கோஷ்டியினர் 153 ஓட்டங்களையும் வாணிநிகதன வீரர்கள் 123 ஓட்டங்களையும் எடுத்தனர். கென்னடி வீரர்கள் மேலதிகமாக 30 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றனர்.

## ஸ்டார் யூனியன் வெற்றியீட்டியது

கோண்டாவில், செவ்.

காரைநகர் ஸ்டார் யூனியனுக்கும் பயிரிக்கூடல் கிரிக்கெட் கோஷ்டியினருக்குமிடையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஸ்டார் யூனியன் முதல் ஆட்டத்தில் 7 விக்கெட் நஷ்டத்திற்கு 101 ஓட்டங்களையும், பயிரிக்கூடல் கிரிக்கெட் கோஷ்டியினர் எல்லா விக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

இரண்டாவது ஆட்டத்தில் பயிரிக்கூடல் கிரிக்கெட் கோஷ்டியினர் எல்லா விக்கெட்டுகளையுமிழந்து 53 ஓட்டங்களைப் பெற்றனர். பயிரிக்கூடல் கிரிக்கெட் கோஷ்டியினர் விக்கெட்டுக்களை இழந்த காரணத்தலே ஸ்டார் யூனியன் இரண்டாவது ஆட்டத்தை ஆடாது வெற்றியீட்டியது.

## கொக்குவில் வென்றது

கோண்டாவில், செவ்.

கொக்குவில் கிரிக்கெட் கோஷ்டியினருக்கும் தலையாளி விளஸ் கோஷ்டியினருக்கும் இடையே ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் கிரிக்கெட் கோஷ்டியினர் வெற்றியீட்டினர். கிரிக்கெட் போட்டி தலையாளி மைதானத்தில் நடைபெற்றது.

## கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

சண்டிலிப்பாய் கலைவாணி விளையாட்டுக் கழகத்திற்கும் அராலி விளையாட்டுக் கழகத்திற்கும் நேற்று முன்தினம் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் போது கலைவாணி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

## ஸ்ரீமதி தேவதாஸ்காந்தி

சென்னை, மே 11

ராஜாஜியின் புதல்வியும், காந்திஜியின் மருமகளுமான ஸ்ரீமதி தேவதாஸ காந்திக்கு மார்பில் ஏற்பட்டுள்ள ஒரு கட்டியை அகற்றுவதற்காக ஆப்ரேஷன் நடைபெற்றது.

# பிரச்னை தீராவிடில் உண்ணாவிரதமிருப்பர்

## வேலையற்ற புலவர் மன்ற கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

"இன்றைய அரசாங்கம் சாதிசமய வேறுபாடின்றி ஆட்சிசெய்யுமென அறிவித்திருப்பதால் தமிழில் உரிமைக பட்டம்பெற்றிருக்கும் எங்களுக்கு நிச்சயம் தமிழாசிரியர் வேலைகிடைக்குமென எதிர்பார்க்கிறோம். அல்லாமலும் அரசாங்க ஊழியர் பிரச்னை, வெங்காயக் கட்டுப்பாட்டுப் பிரச்னைபோன்ற எத்தனையோ பிரச்னைகளுக்கு முக்கியத்துவம்கொடுத்து எடுத்துப் பேசிவந்த எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்கள் பிரச்னைகளிலும் அக்கறை காட்டத் தொடங்கியிருப்பது எங்கள் எதிர்காலம் ஒளிமயமாயிருக்கும் என்பதற்கு ஓர் அறிகுறியேயாகும்" என்று புலவர் வை. சோமஸ்கந்தர் புலவர்மன்றக் கூட்டம் ஒன்றுக்கு தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய புலவர் க. பூரணம் "சிங்களத்திலே திறமைபெற்றவர்கள் கூடிய சம்பளமும், ஆங்கிலத்திலே திறமைபெற்றவர்கள் அதிக சம்பளமும் எடுக்கும்பொழுது தமிழிலே திறமைபெற்ற பண்டித, புலவர், வித்துவான்கள் அவர்களுக்கு ஈடான சம்பளம் கேட்பதில் தவறுஎதுவுமில்லை. இன்றைக்கு அறிஞர்களும் சரி ஒன்றும் அறியாத பாமரர்களும்சரி தமிழ்படித்தவர்களைத் தரக்குறைவாக எண்ணுவதற்குக் காரணம் அவர்களுடைய அறிவுக்குறைவன்றி; சம்பளக்குறைவே ஆகும்" எனக் குறிப்பிட்டார்.

பண்டிதர் குகவையிரவனூர், புலவர் சோ. கனகரத்தினம் ஆகியோரும் பேசினர்.

பண்டிதர் புலவர்கள் விஷயமாக முயற்சி எடுத்துவரும் தமிழரசுத்தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், பண்டிதர் கா. பொ. இரத்தினம் போன்ற தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கும் இலங்கைப் பண்டிதர்சங்கம் வாணிகலைக்கழகம் போன்ற ஏனைய மன்றங்களுக்கும் நன்றி தெரிவிப்பதுஎன்றும் தமது குறைபாடுகள் அடங்கியமகஜர் ஒன்றை கல்விமந்திரி, பிரதமமந்திரி, ஸ்தலஸ்தாபனமந்திரி போன்ற மந்திரிகளுக்கும், மற்றும் சகல தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைப்பதென்றும் கல்வி அமைச்சரைப் பேட்டிகண்டு பிரச்னையை விரிவாக எடுத்துச்சொல்வதுஎன்றும் இவைகள் ஒன்றும் பலிக்காத பட்சத்தில் இறுதி நடவடிக்கையாக உண்ணாவிரதத்தை மேற்வது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# அரசாங்க சேவையில் உத்தியோக மொழி அமுல்

## நீதிமந்திரி ஆராய்கிறார்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

அரசாங்க சேவையில் உத்தியோக மொழியை எவ்வாறு அமுல் செய்வது என்பது குறித்து நீதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்கா மந்திரி சபையிடம் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவிருக்கிறார்.

உத்தியோக மொழிச்சட்டம் அமுலாக முன்னர் அரசாங்க சேவையில் சேர்ந்த ஊழியர்கள், அதன் பின்னர் சேர்ந்த புதிய ஊழியர்கள், சிங்களம் படிக்காத காரணத்துக்காக கட்டாயமாக ஓய்வு பெறச் செய்யப்பட்ட ஊழியர்கள் ஆகிய மூன்று வகை ஊழியர்களின் நிலை பற்றி மந்திரியின் அறிக்கையில் தெளிவாக்கப்படும்.

பொதுச் சேவைக் கமிஷன், திறைசேரி, உத்தியோக மொழி அமுல் பிரிவு ஆகியவற்றிடமிருந்து இதற்கான ஆலோசனைகளை நீதிமந்திரி கோரியுள்ளார்.

பழைய ஊழியர்கள் இந்த வருட இறுதிக்குள் சிங்களத்தில் தேர்ச்சி அடையவேண்டும் என்பதும், புதிய ஊழியர்கள் சிங்களத்தில தேர்ச்சியடைய மேலும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதுமே இப்போதைய நிலையாகும்.

1956-ம் ஆண்டுக்குப் பின்னர் கடந்த ஒன்பது வருடங்களாக கடமையாற்றிய நீதிமந்திரிகள் அரசாங்க சேவையில் உத்தியோக மொழியை எவ்விதம் அமுல் செய்வதென்பது பற்றி ஆராய்ந்தார்கள் எனினும் இறுதியான முடிவு எதற்கும் வந்ததில்லை. இவ்விஷயம் சம்பந்தமாக தீர்க்கமான முடிவு எவ்வளவு விரைவில் காணப்படுகிறதோ அவ்வளவுக்கு நல்லதாகும் என திறைசேரி வட்டாரங்கள் கருதுகின்றன.

## 500 ஏக்கரில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காணலாம்", என்று அவர் சொன்னார்.

வெங்காயக்கூடு பின்னும் தொழிலில் ஈடுபடுவோரிடம் உடனே அதை ஏழு சத விலை கொடுத்து வாங்க பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தயாராக இருப்பதாயும் அது தவறினால் சமாஜமே அவைகளை விலைக்கு எடுக்க ஆயத்தமாக இருக்கிறதெனவும் குடும்பம் குடும்பமாகவே இத்தொழிலில் ஈடுபட்டால் நல்ல வருமானம் கிடைக்கவும் வழி உண்டு எனவும் திரு. சிவசிதம்பரம் கூறினார்.

மகாநாட்டு முடிவில் கிராம சேவகர்கள், உற்பத்தியாளர்கள் கொண்ட மகாநாடொன்றை இரண்டுவாரத்தில் கூட்டுவதெனவும் 15 பேர் பயிற்சிபெற ஆயத்தமாய் இருக்கும் கிராமசேவகர்கள் பிரிவுகளிலும் கூடைபின்னும் பயிற்சிநிலையங்களை உடன் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

## ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தல்

நல்லூர், செவ்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தின்போது சன்னதிக்கெதிரே நடத்தப்பட்டுவரும் ஸ்ரீமுருகன் தண்ணீர்ப்பந்தலின் இவ்வருட நிர்வாகசபை கூடியபோது பிரம்மஸ்ரீ சுந்தரராஜ சர்மா தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். எதிர்வரும் உற்சவகாலத்தில் தண்ணீர்ப் பந்தலைச் சிறந்தமுறையில் நிர்வகிப்பதென்றும் வழமைபோல் மூத்தமிழ்மணி மணிபாகவதரைக் கொண்டு இம்முறை கந்தபுராண விரிவுரை நடத்துவதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## பங்களா சிறை

உதகை, மே 11

ஷேக் அப்துல்லாவும் மிர்ஸா அப்சல் பெக்கும் ஆயுத போலீஸ் பந்தோபஸ்துடன் உதகை கொண்டுவரப்பட்ட பங்களா ஒன்றில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆசிரியருக்குக்கடிதங்கள்

## கவனிப்பார்களா?

இலங்கையின் இரண்டாவது தலைநகரெனப் போற்றப்படும் யாழ்ப்பாண நகரத்தின் கால்வாய்கள் நாற்றமெடுத்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக ஸ்ரான்லி வீதி வடிகால் வாய்கள் துர்நாற்றம் வீசுகின்றன. வர்த்தக ஸ்தாபனங்களில் வேலைசெய்வோர் சகிக்கமுடியாத நிலையிலுள்ளனர். இதுபற்றி மாநகரசபைக்கு பல தடவைகள் அறிவித்தும் கவனம் செலுத்தவில்லை. இனியாவது மாநகரசபை இதில் கவனம் செலுத்துமா?

எம். ராஜரத்தினம்,
யாழ்ப்பாணம்.

## பதிவுத்தபால்

இப்பொழுது பதிவுத்தபால் அனுப்புவதற்கு 65 சதம் கட்டணம் செலுத்தவேண்டியுள்ளது. இதை இருபது சதமாகக் குறைத்து பொது மக்களுக்கு ஆறுதலளிக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

எம். பி. சி. மொகமட்,
யாழ்ப்பாணம்.

## உளவியல் மன்றம்

உடுப்பிட்டி, செவ்.

மனோதத்துவக் கல்வியில் நாட்டமுள்ள பல பள்ளிமாணவர்கள் இங்கு ஒன்றுசேர்ந்து உளவியல் மன்றமொன்றை ஆரம்பித்துள்ளனர். மாணவர்களிடையே தன்னம்பிக்கையை வளர்த்து அவர்களின் எதிர்காலத்திற்கு நல்ல வழிகாட்டும் நோக்கத்துடனேயே இந்த மன்றம் நிறுவப்பட்டிருக்கிறது.

மாதா மாதம் உளவியல் சம்பந்தம்பட்ட புத்தகங்களை வாங்கி அங்கத்தவர்களிடையே விநியோகிக்கவும் கால ஓட்டத்தையொட்டி மேல்நாடுகளைப் போல மனோதத்துவ சாதனைபயிற்சிகளை மேற்கொள்ளவும் நாட்டின் நாலா பாகங்களிலுமுள்ள மனோதத்துவக் கலையில் நாட்டமுள்ள மாணவர்களை ஒன்றுசேர்த்து அகில இலங்கை மனோதத்துவ நிலையமொன்றை உருவாக்கவும் இந்த மன்றம் முடிவுசெய்துள்ளது. போதனை பயிற்சிகளையும் வெகுவிரைவில் மேற்கொள்ள இச்சங்கம் தீர்மானித்துள்ளது.

போஷகர் திரு. ஆ. தாமோதரம்பிள்ளை, தலைவர் திரு. கே. இராசசிங்கம், உபதலைவர் திரு. கி. தெய்வேந்திரன், செயலாளர் திரு கே. பேரம்பலம், உபசெயலாளர் திரு தி. பஞ்சராசா, நூல்நிலையப் பொறுப்பாளர் திரு ப. அப்புஜேஸ்.

## வாலிபர் முன்னேற்றச் சங்கம்

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறையைச் சேர்ந்த ஓடக்கரை ஐக்கிய வாலிபர் முன்னேற்றச் சங்க வாசிகசாலையை வடமராட்சிக் காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் சம்பிரதாயப்படி குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார்.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. க. நடராசா, அங்கத்தவர் திரு. எம். வேலுமயிலும், வேலைவேண்டுவோர் கழகத்தலைவர் திரு கே. ரி. இராசசிங்கம், திரு. மு. மகேஸ்வரன் முதலானோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர்.

நகரசபைத் தலைவர் திரு. நடராசா பேசுகையில் வாசிகசாலையின் அவசியம் பற்றி வற்புறுத்தியதுடன் நகரசபை மேற்படி வாசிகசாலையின் அபிவிருத்திக்கு சகல உதவிகளையும் அளிக்கும் என உறுதி கூறினார்.

இச்சங்க உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- எஸ். வடிவேலு, உப-தலைவர்:- எஸ். பொன்னையா. காரியதரிசி:- எம். மகேஸ்வரன், தனாதிகாரி:- பீ. கல்லதம்பி.

## சுன்னாகம் பட்டணசபை

சுன்னாகம் பட்டணசபைக்குக் கீழ்க்காணும் தொழிலாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 22-5-65-ம் திகதி காலை 10-00 மணிக்கு முன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் சுன்னாகம் பட்டணசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். சகல விபரங்களையும் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

1. தெருவேலைத் தொழிலாளிகள் — 2.

3. காரியாலய தொழிலாளி தூதுவன் — 1.

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டணசபை, சுன்னாகம்,
பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்.

10-5-65 172

## கேள்வி விளம்பரம்

### டச்சுரோட்டு அமைத்தல்

1965-ம் ஆண்டுமே (வைகாசி) மாதம் 29-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி வரையும வட்டுக்கோட்டை கிராம சபை அக்கிராசனரால் பதிவு செய்யப்பட்ட கொந்திராத்துக்காரர்களிடமிருந்து "டச்சரோட்டு அமைக்கும் வேலைக்கு" சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 28-5-65-ம் திகதி பிற்பகல் 1-00 வரையும் ரூபா 25-80 ரெண்டர்ப்பணமாகக் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்கள் யாவும் எனது கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

செ. சின்னத்தம்பி,
தலைவர்,
வட்டுக்கோட்டைக் கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை.

10-5-65 173

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல பாவனையிலுள்ள டீசல் என்ஜின் நான்கு சிலிண்டர்கள் ஒரு ஹார் மோட்டர் பாக்கிங்மெஷின் விற்பனைக்குண்டு. விபரத்திற்கு: ராஜா மில்ஸ், துறைமுகவீதி, பருத்தித்துறை. 248

நல்ல தரமுள்ள வெங்காயக்கூடுகள் விற்பனைக்கு இருக்கின்றன. 300 கொண்டகட்டு (24) இருபத்து நாலுரூபா, கோப்பாய் தெற்கு ப. நோ. கூட்டுறவுச் சங்கம் கோப்பாய். 250

பெரிய கடையில், எல்லா வியாபாரங்களுக்கும் மத்தியிலுள்ள உகந்தகடை ஒன்றுவிற்பனைக்குண்டு. கடிதமூலம் விண்ணப்பிக்கவும், விலாசம் இல. 263 ஈழநாடு பேற்பார்த்து யாழ்ப்பாணம். 263

புதிய மொடல் "சிங்கர்" ரெயிலறிங் கால்மெஷின் விற்பனைக்குண்டு. நல்ல நிலைமையிலுள்ளது. பொ. தம்பித்துரை, புற்பதி ரோட்; கொக்குவில் கிழக்கு. 252

## ஆசிரிய பயிற்சி

விசேட பயிற்சி விண்ணப்பபடிவத்திற்கு 20 சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். மேற்படி சகல பயிற்சிகளுக்கும் வகுப்புகளும் நடாத்தப்படும். மா. புவனேந்திரன், வர்த்தக கல்வி நிலயம், திருநெல்வேலி. 265

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்லிமெண்டில் மலாய் சமூக பிரதிநிதித்துவம்:

## அரசியல் சார்பானதாகக் கருதி வழக்கு தள்ளுபடி

கொழும்பு, திங்கள்

**ஜனப்பிரதிநிதிகள் சபையில் மலாய் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய வகையில் மலாய் சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரை நியமன அங்கத்தவராகப் பிரதமர் தெரிவுசெய்யவில்லையெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இன்று தள்ளுபடி செய்யப்பட்டது.**

இந்த வழக்கு, நீதியரசர்கள் திரு. டி. எஸ். பெர்னாண்டோ, திரு. சிறிமனே ஆகியோர் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதியரசர் திரு. பெர்னாண்டோ வழக்கை தள்ளுபடிசெய்து தீர்ப்பளிக்கையில், தொடரப்பட்ட வழக்கு அரசியல் சார்பானதாக இருப்பதாகவும் அதைக் கோர்ட் மூலம் சரிப்படுத்த முடியாதென்றும் தெரிவித்தார்.

நாட்டின் பல அவலங்களுக்கு நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடுவது இப்போது வழக்கமாகிவிட்டதென்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வழக்கில் டாக்டர் ரத்னபாலா, மலாய் சமூகத்துக்குப் பிரதிநிதித்துவம் வகிக்க எதுவித உரிமையும் கிடையாது எனவும் மலாய் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் ஜனப்பிரதிநிதிகள் சமூகத்தில் பிரதிநிதித்துவம் வகிக்காததால் அச்சமூகத்துக்கு பெரிதும் கெடுதல் விளைவிப்பதாக இருக்குமெனவும் வழக்காளிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. திரு. எம். எஸ். சிதீன் வழக்கை தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கில் திரு டட்லி சேனநாயகா, சேர் ராசீக்பரீத், திரு. வி. அண்ணாமலை, டாக்டர் ஏ. ரத்னபாலா ஆகியோர் பிரதிவாதிகள்.

## வடக்கின் வரவேற்பில் மந்திரி திருப்தி

கொழும்பு, திங்கள்

இப்போது எந்தச் சமூகத்தினரும், எந்த அரசியல் கட்சியினரும் பயமின்றி வடக்கு தெற்குப் பகுதிகளுக்குச் செல்ல முடியுமென்றும் முன்னைய அரசாங்கத்தின் ஆட்சியில் வகுப்பு வெறி வளர்க்கப்பட்டதால் தாம் அப்போது அப்படிச் செய்யமுடியவில்லையென்றும் தொழில் மந்திரி ஜனாப் முகம்மது காரம்பிட்டி வேலையற்றோர் நிவாரண நிலையத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் தமக்கும், மந்திரி சுகததாசாவுக்கும் அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்பினால் தாம் கவரப்பட்டதாயும் அவர் கூறினார்

# இரத்னயகா செனட் தலைவராவார்?

கொழும்பு, திங்கள்

செனட் சபையில் புதிய தலைவர் பதவிக்கு செனட்டர் ஏ. ரத்னயகாவின் பெயர் அடிபட்டு வருகிறது. தற்போதைய தலைவர் செனட்டர் அமரசூரியாவினதும், மற்றும் 9 செனட்டர்களினதும் பதவிக்காலம் வருகிற அக்டோபர் மாதத்துடன் முடிவடைகிறது. இந்தப் பத்துப் பேரில் ஐவர் நியமிக்கப்படுவர். மிகுதி 5 பேர் தெரிவுசெய்யப்படுவர்.

நியமன செனட்டர்கள் தமது விருப்பப்படியே நியமிக்கப்படுவார்கள் என்றும், தெரிவு செய்யப்படும் செனட்டர்களை எம். பிக்கள் தெரிவு செய்ய சுதந்திரம் உண்டு என்றும் பிரதமர் அரசாங்க எம். பிக்கள் கூட்டத்தில் கூறினார்.

# ரஷ்யா அனுப்பிய வானவெளி நிலையம்

## சந்திரனைப் படம் பிடிக்கும்

மாஸ்கோ, மே. 10

சந்திரனை நோக்கி சோவியத் யூனியன் தானியங்கும் வானவெளிக் கப்பலொன்றை அனுப்பிவைத்துள்ளது. பல கட்டு ராக்கெட்டுகளின் உதவியுடன் அனுப்பப்பட்ட இக்கப்பல், ஒரு வானவெளி நிலையமாக விளங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது, மாஸ்கோ நேரப்படி நேற்றிரவு பத்து மணிக்கு, இந்த வானவெளிக் கப்பல் பூமியிலிருந்து இரு லட்சத்து பத்தாயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் இருந்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பலில் பதிவு செய்து கொள்ளக்கூடிய சாதனங்கள் பொருத்தப் பட்டிருக்கின்றன. இதன் பெயர் "ஐந்தாவது லூனிக்" ஆகும்.

சந்திரனை நோக்கி அனுப்பப்பட்ட இக்கப்பல் சந்திர மண்டலத்திலுள்ள பகுதிகளை மிக அண்மையில் சென்று படம் பிடிக்கும். ஆனால் இவ் விண்வெளிக் கப்பல், சந்திர மண்டலத்தில் போய் இறங்குமா அல்லது சந்திரனை வலம் வருமா என்பது குறித்து ரஷ்ய விஞ்ஞானிகள் எதுவும் கூறவில்லை.

உயர்பிரிவு

# தட்டெழுத்தாளர் பரீட்சை: தமிழருக்கு இடமில்லை

யாழ்ப்பாணம், செவ்

தட்டெழுத்தாளர் சேவை ஆரம்பமானதிலிருந்து தட்டெழுத்தாளர்களால் கோரப்பட்டு வந்து இப்போது முதல் தடவையாக நடைபெறவிருக்கும் ஆங்கில தட்டெழுத்தாளர் உயர் பிரிவு பரீட்சையில் தோற்றுபவர்கள் சிங்கள தகுதிப் பரீட்சை இரண்டாம் கிரேட் சித்திபெற்றிருக்க வேண்டுமென்பதாலும் ஒரு நிமிடத்துக்கு 15 சொற்கள் சிங்கள தட்டெழுத்தில் டைப் செய்யவேண்டிய பரீட்சையிலும் தோற்ற வேண்டிய நிபந்தனையிருப்பதாலும் ஆங்கில தட்டெழுத்தாளர்களாகவுள்ள தமிழர்கள் உயர் பிரிவுப் பரீட்சையில் தோற்ற முடியாத நிலையிலிருப்பதாக அறியப்படுகிறது.

இப்பரீட்சை இம்மாதம் 22-ம் திகதியும் 29-ம் திகதியும் நடைபெறவிருக்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 12-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

## மந்திரிகள் திரும்பினர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தொழில் வீடமைப்பு மந்திரி ஜனாப் எம். எச். முகமதுவும், தேசிய சேவைப்பகுதி மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவும் யாழ்ப்பாணத்தில் தமது இரண்டு நாட்கள் விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் இரவு 11-30 மணியளவில் விசேஷ விமானம் மூலம் பலாலியிலிருந்து கொழும்பு சென்றனர். யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் மந்திரிகளுடன் அதே விமானத்தில் கொழும்பு சென்றார்.

"யாழ்ப்பாண மக்களுடைய நியாயமான சகல பிரச்னைகளையும் தீர்த்துவைப்போம்" என்று மந்திரிகள் தம்மை அனுப்பிவைப்பதற்காக வந்திருந்த மக்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தனர்.

## 3 கோடி கடன் திரட்ட அங்கீகாரம்

கொழும்பு, திங்கள்

நிதிமந்திரி திரு. வன்னிநாயக்கா நடப்பு ஆண்டுச் செலவுக்கு ரூபா 3 கோடி கடன் திரட்ட அங்கீகாரமளித்திருக்கிறார்.

## வெள்ள நிவாரணம்

கொழும்பு, திங்கள்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இருபதினாயிரம் மக்களுக்கு முனிசிப்பல் சபையின் பொது உதவி இலாகா தொடர்ந்து உணவு வழங்கி வருகிறது.

## ஆயுர்வேத மாணவருக்கு சலுகைகள்

கொழும்பு, திங்கள்

ஆயுர்வேத கல்வி பயிலும் மாணவர்களின் நலனை உத்தேசித்து, இவர்களுக்குப் போதியளவு சலுகைகள் வழங்க சுகாதார மந்திரி முன்வந்துள்ளார்.

வார்டுகளையும், விடுதிகளையும், நூல் நிலையங்களையும் திறந்து மேலதிகக் கட்டடங்களையும் இந்த மாணவர்களுக்கு ... சுகாதார மந்திரி ... துள்ளார்.

## "கணவன் ...

(1-ம் பக்க தொடர்ச்சி)

பொலிஸ் நிலையத்தில் சகோதரி வாக்குமூலமளித்தார். நானும் பொலிஸில் வாக்குமூலமளித்தேன். செப்டம்பர் 4-ம் திகதி சகோதரி காலமானார்.

எதிரியின் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறிய தாவது:-

எதிரியின் வீட்டில் என் மற்றொரு சகோதரியான அருளம்மாவும் இருந்தார். ஆனால் சம்பவம் நடந்ததினம் அருளம்மா அங்கிருக்கவில்லை. எதிரியின் காணிக்குள்ளிருக்கும் மற்றொரு வீட்டில் தான் வசிக்கிறேன். என்னுடன் மற்றும் நான்குபேர் இருக்கிறார்கள். அந்தக் காணியை பிரிப்பதற்கு ஒரு வருடத்திற்குமுன் முயற்சித்தேன். அதன் பின் எதிரி அடிக்கடி கதைப்பதில்லை. சகோதரி என்னுடன் கதைப்பார். 10 வருடத்திற்குமுன் சகோதரிக்கு திருமணம் நடைபெற்றது. சம்பவம் நடந்த தினத்தன்று நான்கு வருடத்திற்குமுன் எதிரிக்கும், காலஞ் சென்றவருக்கும் மனஸ்தாபம் இருந்தது.

வழ- எனக்குத் தெரிந்த வரையில் எதிரிக்கும் காலஞ் சென்றவருக்கும் மனஸ்தாபம் இருக்கவில்லையென்று கீழ்க் கோர்ட்டில் கூறினீரா? — ஆம்.

வழ- பொலிஸ்நிலையத்திற்கு நீரும் காரில் போனீர்?—நான் காரில் போகவில்லை. நான் சயிக்கிளில் பொலிஸ்நிலையத்திற்குச் சென்றேன். காரில் காலஞ்சென்றவருடன். எதிரியும், எதிரியின் தகப்பனாரும், அருளம்மாவும் சென்றார்கள். பின் பொலிஸ்நிலையத்தில் சைக்கிளைவைத்துவிட்டு ஆஸ்பத்திரிக்கு காரில் சென்றேன்

எதிரியின் தகப்பனார் நவாலியில் வசிப்பவர், மகன் வீட்டிற்கு வரும்சமயம் அங்குதான் தங்குவார், சம்பவம் நடந்த தினம் அன்றிரவு எதிரியின் தகப்பனாரும், அருளம்மாவும், செல்லாச்சி என்பவருடைய வீட்டில் தங்கினார்கள்.

வழ- அன்றுமட்டும் ஏன் செல்லாச்சி வீட்டில் தங்கினார்கள்?— தெரியாது.

வழ- நான் கூறுகிறேன். சம்பவம் நடந்ததினம் எதிரிதான் மனைவியை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனார். நீர் அங்கு நின்றபடியினால்தான், எதிரிமுதலில் பொலிஸ்நிலையத்திற்குக் கொண்டுசென்றார். என் சகோதரி கூறியபடியால் தான் பொலிஸ்நிலையத்திற்குக் கொண்டுசென்றார்.

நீதி- இந்தக் காணிக்கு பிரிவிடுதல் வழக்கு வைத்தீரா?- ஆம்.

நீதி- நீர் வழக்காளியா? எதிரியா?— வழக்காளி, வழக்கு இன்னும் முடியவில்லை. என் சகோதரி மூலம் எதிரிக்கும் அக்காணியில் பங்குண்டு. இந்த வழக்கிற்கு செல்லாச்சியும் அருளம்மாவும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்கள்! இறந்தவர் தரப்பில் எதிரி எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. பிரிவிடுதல் வழக்கில் காலஞ்சென்ற சகோதரிக்கும் பங்கு உண்டு என்பதை தெரிவித்திருந்தேன், எவ்வளவு பங்குஎன்று எனக்கு ஞாபகமில்லை.

(விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.)

## திருத்தம்

யாழ்ப்பாணம், புதன்

அக்கராயன்குளத்தைச் சேர்ந்த ஜானகி கத்தியால் குத்தப்பட்டு யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் மரணமானார் என்று சென்ற சனிக்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் தவறுதலாக செய்தி வெளியிட்டமையிட்டு வருந்துகின்றோம்.

ஜானகி மரணமடையவில்லை. ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் சைவசமய சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்று, பல சைவ ஆதீனங்களின் பெருமதிப்பைப் பெற்ற மகானுவார். சிதம்பரத்திலேயே சமாதியாகியுள்ளார். ஈழம் அளித்த இந்தத் தவச்செல்வத்தைப் பற்றி அண்ணாமலையில் படிக்கும் நமது மாணவர்களுக்குக்கூட ஒன்றுமே தெரியாதாம்! கேட்க மிக வருத்தமாக இருந்தது.

அப்பர் சுவாமிகளின் குருபூசையன்றுதான் இவரது குருபூசையும். எவ்வளவு பொருத்தம்! ஞானபிரகாச தடாகத்தின் கரையிலே அவரது சமாதி உள்ளது. மேலே யாது காப்பில்லை. சூரியர் சந்திரர் வாசம். அவரது நூல்நிலையத்திலே அருமையான பல தமிழ் நூல்கள் தூங்குகின்றனவாம்! சிதம்பரத்திலுள்ள ஈழத்து மாணவ மாணவிகள், இவ்விஷயத்தில் சற்றே அதிக சிரத்தை காட்டி, ஈழமளித்த இந்தத் தவச்செல்வத்தைப் போற்ற வேண்டுமென்றும் அவரது அருளைப் பெறவேண்டுமென்றும் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அவர்களுக்கு இது நினைப்பு இருக்குமோ அல்லது மறந்துவிடுவார்களோ!

துன்பக்கடலிடைத்தோணித் தொழில் பூண்ட தொண்டர் தம்மை, இன்பக் கரை முகக்கேற்றுந்திறத்தன மாற்றயலே, பொன்பட்டொழுகப் பொருந்தொளி செய்யுமப் பொய்பொருந்தா, அன்பர்க்கணியன காண்க ஐயாறன் அடித்தலமே.

—அப்பர் அடிகள்

## "குழாய் நீர் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்கள் திரு. கந்தையா இருந்த இடத்தைத் தவிர்த்து தொடர்ந்து தமது வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

சுவாமியார் வீதியில் திரு. கந்தையா சத்தியாக்கிரகம் செய்த இடத்தில் பெருமளவில் மக்கள் கூடியிருந்தனர். பொலிசாரும் ஸ்தலத்தில் காவல்புரிந்தனர். நமது நிருபர் திரு. கந்தையாவிடம் இதுபற்றி விசாரித்தபோது அவர் கூறியதாவது:- "பிரதான வீதிக்குத் தண்ணீர் கொடுத்த பின்னரே இதர பகுதிகளுக்கு கொடுக்கப்பட வேண்டும். அவ்வீதியில் அனேக ஏழைமக்கள் இருக்கின்றார்கள். சுவாமியார் வீதியில் இருப்பவர்கள் எல்லோரும் பணக்காரர்கள். இவ்விஷயத்தில் மேயர் சர்வாதிகாரமாக நடந்து கொண்டார். நான் கட்சி தனிவிரோதம் முதலியவற்றை மறந்தே நடந்துகொள்கிறேன்" என்றார்.

"சுவாமியார் வீதியும் உங்கள் வட்டாரத்தில் தானே இருக்கின்றது. ஆகையால் ஏன் இப்படி உங்கள் வட்டாரத்திலேயே பாகுபாடு காட்டுகின்றீர்கள் என்று கேட்டபொழுது மேயர் தான் இவையெல்லாவற்றிற்கும் காரணம். முதலில் கொழும்புத்துறை வீதிக்கு கொடுத்த பின்னரே மறு வீதிகளுக்குக் கொடுக்கப்படவேண்டும்" என்றார்.

திரு. கந்தையா இருந்த இடத்திற்கு யாழ்ப்பாணம் பொலிசார் வந்து அவரிடமிருந்தும் தொழிலாளர்களிடமிருந்தும் முறைப்பாடுகளைப் பதிவு செய்துகொண்டனர்.

இதுபற்றி மேயரிடம் விசாரித்த போது தான் நீதியான முறையில் இவ் விஷயத்தில் நடந்து கொண்டதாகவும் இதில் குறை கூறுவதற்கொன்றும் இல்லை என்றும் தெரிவித்தார். சுவாமியார் வீதிவேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதென்றும் மேயர் தெரிவித்தார்.

புதுடில்லி, மே 11

இந்தியாவின் சிரேஷ்ட ராஜதந்திரிகளில் ஒருவரான திரு. ராஜேஸ்வர்தயாள் பாரிஸில் இந்திய ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org